**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் புரட்டாசித் திங்கள் 15 ம் நாள்

**I.A.No.338/2023**

**in**

**OS.No.77/2020**

1. தனலெட்சுமி
2. குமார்
3. செல்வராஜ்
4. செல்வராணி .... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிர்//**

1. விமலா
2. சிநேகா
3. பிரீதா
4. தசா
5. மாயகிருஷ்ணன்
6. சார்பதிவாளர், மன்னார்குடி
7. மாவட்ட ஆட்சியர், திருவாரூர். .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.தினகரன், B.A., B.L., அவர்களும், 5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராமகிருஷ்ணன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும்,

வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் வியாஜ்ஜியம் செய்ய திசா (இளவர்) / 4ம் பிரதிவாதிக்கு, வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற காப்பாளராக நியமனம் செய்து வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 3 மற்றும் பிரிவு 151 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர் இம்மனுவில் 3ம் மனுதாரர் ஆவார். இவ்வழக்கில் திசா 4ம் பிரதிவாதிகளாக (இளவர்களாக) சேர்க்கப்பட்டிருக்கிறார். மேற்கண்ட மைனர் பிரதிவாதிக்காக வழக்கு வியாஜ்ஜியம் செய்வதற்கு இதுநாள் வரையில் அவர்களது தாயாரும், இயற்கை காப்பாளருமான விமாலா பொறுப்பேற்று நடத்த வேண்டியிருந்தது.

தற்போது 1ம் பிரதிவாதியான விமலா தோன்றா தரப்பினராகியிருப்பதால், 4ம் பிரதிவாதிக்காக வழக்கு நடத்த இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே நீதிமன்றத்தார் வழக்கறிஞர் ஒருவரை 4ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற காப்பாளராக நியமித்து உத்தரவிட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இல்லாவிடில் மனுதாரருக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும். ஆகையால், மேற்கண்ட காரணங்களை அனுசரித்து இவ்வழக்கு வியாஜ்ஜியம் செய்ய திசா (இளவர்)/ 4ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற காப்பாளராக நியமனம் செய்து

வழக்கை மேல்நடத்த உத்தரவிடுமாறு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் அழைப்பாணை அனுப்பபட்டு முன்னிலையாகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 5 ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளனர்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

5) <u>**தீர்வு**</u> :-

1. மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வாக்குமூலம், மற்றும் வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

2. மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

3. மனுவினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 1 ம் பிரதிவாதிக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பட்டு அவருக்கு சார்வு ஆகவில்லை என்பதால் தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுக்கப்பட்டு கடந்த 15.09.2023 ம் தேதியன்று 1 ம் பிரதிவாதி முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையயில் 4 ம் எதிர்மனுதாரரான திசா (இளவர்) என்பதால் இந்நீதிமன்றத்தின்

மூலம் வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற காப்பாளராக நியமித்து வழக்கை மேல் நடத்தக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**4.** மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. 4 ம் எதிர்மனுதாரர் இளவர் என்பதால் அவரின் நீதிமன்ற காப்பாளராக வழக்கறிஞர் திரு. K. ஆனந்த், என்பவரை நியமனம் செய்து இவ்வழக்கை மேல் நடத்த உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற காப்பாளருக்கான கட்டணம் ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) தொகையை மனுதாரர் வருகின்ற 18.10.2024 ம் நாளிற்குள் செலுத்தி வைக்க உத்தரவிட்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

6) **முடிவாக**, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (01.10.2024) அவையறியப் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.10.04 16:34:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.10.04 16:34:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.